**தவறான தகவல் அளித்து** (False information) **அல்லது தவறான முறையீடு** (False complaint) **செய்து குழந்தைக்கு பாதிப்பு இழைத்தலுக்கான தண்டனைகள்** ஒரு வருடம் வரையிலான சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும் (பிரிவு 22(3))

**பிரிவு 23 (1) & (2) ல் கீழ் கூறப்பட்டுள்ளவாறு செயல்படாது குழந்தை** (Identity of a child) **குறித்த தகவல் ஊடகத்தில் தெரிவிக்கப்பட்டால்** 6 மாதங்களுக்கு குறையாத ஒரு வருடம் வரையிலான சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும். (பிரிவு 23 (4))


**சிறப்பு நீதிமன்றங்கள்** : இந்த சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளை அரசாங்கத்தால் "அறிவிக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றங்கள்" மூலம் விரைவாக விசாரிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

### குழந்தைகளுக்கு எதிரான பாலியல் சம்பந்தப்பட்ட புகார்களை யாரிடம் கூறலாம்?

- காவல் துறை (Police)
- சிறப்பு சிறார் காவல் அலகு
  Special Juvenile Police Unit (SJPU)
- பஞ்சாயத்துதலைவர், கிராம நிர்வாக அதிகாரி
  Village Administrative Officer (AVO)
- குழந்தைகள் நலக் குழு
  Child Welfare Committee (CWC)
- கிராம / ஒன்றிய அளவில் குழந்தைகள் பாதுகாப்பு குழு
  Village / Block Level Child Protection Committee (VLCPC, BLCPC)
- மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு
  (District Child Protection Unit (DCPU)

**கருத்துருவாக்கம்**
**மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கம்**
**சமூக பாதுகாப்பு துறை இயக்குநர் வளாகம்**
எண்.300, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, கெல்லீஸ்,
சென்னை-10 தமிழ்நாடு தொலைபேசி எண்.044-26421358
மின்னஞ்சல் - scpstn4@gmail.com
இணையம் - www.socialdefence.tn.gov.in

# பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான சட்டம் 2012



## மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கம் தமிழ்நாடு

### குழந்தைகளுக்கு எதிரான பாலியல் தாக்குதல்

நவம்பர் 2012 ல் நிறைவேற்றப்பட்ட பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாப்பதற்கான சட்டத்தின் கீழ் பாலியல் தாக்குதல் நான்கு விதமாக பிரிக்கப்பட்டுள்ளன, அவையாவன,

- **"உட்செலுத்தும்" பாலியல் தாக்குதல்** (Penetrative sexual assault) ஒருவர் தன்னுடைய பிறப்புறுப்பையோ அல்லது வேறெந்த உறுப்புகளையோ (விரல் மற்றும் பொருள்களையோ) உட்செலுத்துவதோ, உடலுறவு கொள்வதோ **"உட்செலுத்தும்"** பாலியல் தாக்குதல் எனப்படும்.
- **கடுமையான "உட்செலுத்தும்" பாலியல் தாக்குதல்** (Aggravated penetrative sexual assault) காவல் துறை அலுவலர்கள், இராணுவ வீரர்கள், அரசு ஊழியர்கள், சிறைச் சாலை ஊழியர்கள், அரசு/தனியார் மருத்துவமனை மற்றும் கல்வி நிறுவன ஊழியர்கள் இவர்களால் பிறப்புறுப்புகளை உட்செலுத்தி பாலியல் தாக்குதலுக்குண்டான செயல்களை மற்றும் பல்வேறு இதர செயல் பாடுகளும் பாக்சோ சட்டம் 2012 (பிரிவு 5ன் கீழ் a முதல் u வரை செய்தால்) அது கடுமையான உட்செலுத்தும் பாலியல் தாக்குதல் ஆகும்.
- **பாலியல் தாக்குதல்** (Sexual Assault) பாலியல் உள் நோக்கத்துடன் குழந்தைகளின் அந்தரங்க உறுப்புகளை தவறான நோக்கத்துடன் பிறப்-புறுப்புகளை உட் செலுத்தாமல் அதனை தொடுவது, தான் மட்டு மல்லாது குழந்தையையும் தொடச் செய்வது, பார்க்கச் செய்வது பாலியல் தாக்குதல் ஆகும்.
- **கடுமையான பாலியல் தாக்குதல்** (Aggravated sexual assault) காவல் துறை அலுவலர்கள், இராணுவ வீரர்கள், அரசு ஊழியர்கள், சிறைச் சாலை ஊழியர்கள், அரசு/தனியார் மருத்துவமனை மற்றும் கல்வி நிறுவன ஊழியர்கள் இவர்களால் **பிறப்புறுப்புகளை உட்செலுத்தாமல்** பாலியல் தாக்குதலுக்குண்டான செயல்களை மற்றும் பல்வேறு இதர செயல் பாடுகளும் மேலும் பாக்சோ சட்டம் 2012 (பிரிவு 5ன் கீழ் a முதல் u வரை செய்தால்) கடுமையான பாலியல் தாக்குதல் எனப்படும்.
- **பாலியல் தொந்தரவு (Sexual Harassment) பாலியல் உள் நோக்கத்துடன்** குழந்தையிடம் பேசுவது, படம் காட்டுவது, ஜாடை காட்டுவது, ஒலி எழுப்புவது, ஆபாச பட மெடுக்கும் நோக்கத்துடன் பாலியல் தொந்தரவு செய்வது ஆகியன பாலியல் தொந்தரவு ஆகும்.

### யாரெல்லாம் பாதிக்கப்படுகின்றனர் ?

பெண் குழந்தைகள் மட்டுமல்லாது ஆண் குழந்தைகளும் அதிக அளவில் பாதிக்கப்படுகின்றனர்.

### யாரால் பாதிக்கப்படுகின்றனர் ?

- நெருங்கிய நண்பர்கள், உறவினர்கள்
- இரத்த சம்பந்தமான நெருங்கிய உறவினர்/தத்து எடுப்பவர்.
- வளர்ப்பு பெற்றோர், ஒரே வீட்டில் வசிப்பவர்கள்.
- பகிர்வுடைய குடும்ப உறுப்பினர்கள்.
- குழந்தை பராமரிப்பு செய்யக்கூடியவர்கள் மற்றும் உரிமையாளர்கள்.
- கல்வி/மத/நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள்.
- தனியார் மற்றும் அரசு ஊழியர்கள்.
- காவல்துறை/இராணுவ மற்றும் பாதுகாப்பு வீரர்கள்.

- நம்பிக்கையானவர்கள், பக்கத்து வீட்டிலுள்ளவர்கள்.
- விளையாட்டுப் பயிற்சியாளர்கள.
- குழந்தைகளுடன் அன்றாடம் தொடர்பில் இருப்பவர்கள்.
- முற்றிலும் அறிமுகமாகாத மற்றும் தெரியாத நபர்கள்.

**குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களிலிருந்து அவர்களை பாதுகாக்கும் பல்வேறு சட்டங்கள்.**

- பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகள் பாதுகாப்பு சட்டம் 2012.
- இளைஞர் நீதி (பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) 2000, திருத்தப்பட்ட சட்டம் 2006.
- இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழும் பாலியல் குற்றங்களுக்கான பிரத்யேக சட்ட பிரிவுகள் உள்ளன. (உதாரணமாக பாலியல் பலாத்காரம் பிரிவு 354, பிரிவு 377....)

**பாலியல் குற்றத்திலிருந்து குழந்தைகளை காப்பதற்கான சட்டம் 2012ன் முக்கிய அம்சங்கள்.**

- கடுமையான பாலியல் தாக்குதலுக்கு முக்கியத்துவம் அளிக்கும் சட்டப் பிரிவின் கீழ் பாலியல் குற்றங்களுக்கு ஏற்கனவே தண்டனைப் பெற்ற வராகவோ அல்லது இக்குற்றங்களை புரிவதை வழக்கமாக கொண்டிருக்கும் நபர்களின் விபரங்கள் வெளிச்சத்திற்கு வரக்கூடும்.
- ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கையில் கூறியுள்ளவாறே குழந்தையின் வயது வரம்பு மற்றும் ஆண், பெண் பாலின வேறுபாட்டிற்கான வரையறையை போலவே இச்சட்டத்திலும் கூறப்படுள்ளது.
- பாலியல் குற்றங்கள் செய்வதற்கு தூண்டுவதோ, உடந்தையாக இருப்பதோ தண்டனைக்குரிய செயல்களாக இச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.
- பல்வேறு விதமான பாலியல் துன்புறுத்தலுக்கு ஏற்றபடி கடுமையான தண்டனை பல்வேறுபிரிவுகளில் விரிவாக கூறப்பட்டுள்ளது.
- குழந்தைக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் புகார் குறித்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை களில் அலட்சியம் காட்டுவதற்கு பிரத்யேக தடை.
- இந்திய தண்டனை சட்டத்தில் விடுபட்ட பாலியல் கொடுமைகளுக்கான சட்டங்கள் இச்சட்டத்தின் மூலம் வலுப் படுத்தப்படுகிறது.
- குழந்தைகள் நேயமுள்ள மருத்துவ பரிசோதனை மற்றும் நீதிமன்ற செயல்முறைகள்.
- சிறப்பு சிறார் காவல் அலகு மற்றும் மாவட்ட அளவிலான மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் முக்கிய பங்களிப்புகளை உறுதி செய்தல்.
- மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்காக உரை பெயர்ப்பாளர் மற்றும் நிபுணர்களை நியமிக்கும் பொழுது குழந்தைகளின் கருத்துகளை வெளி கொணர்வதற்கான உரிமைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்துதல் வேண்டும்.

**பாலியல் குற்றங்களுக்கான தண்டனைகள்**

**"உட் செலுத்தும்" பாலியல் தாக்கு தலுக்கான (Penetrative sexual assault) தண்டனைகள்** : 7 வருடத்திற்கு குறையாத சிறை தண்டனை. அது ஆயுள் தண்டனை யாக நீட்டிக்கப்படலாம் மற்றும் அபராதம் விதிக்கப்படும். (பிரிவு 4).

**கடுமையான "உட் செலுத்தும்" பாலியல் தாக்குதலுக்கான (Aggravated penetrative sexual assault) தண்டனைகள்** : 10 வருடத்துக்கு குறை யாத கடுங்காவல் தண்டனை அது ஆயுள் தண்டனையாக நீட்டிக்கப்படலாம் மற்றும் அபராதமும் விதிக்கபடபடும். (பிரிவு 6).

**பாலியல் தாக்குதலுக்கான (Sexual assault) தண்டனைகள்** : 3 வருடத்திற்கு குறையாத சிறை தண்டனை. அது 5 வருடம் வரை நீட்டிக்கப்படலாம் மற்றும் அபராதமும் விதிக்கப்படும். (பிரிவு 8).

**கடுமையான பாலியல் தாக்குதலுக் கான (Aggravated sexual assault) தண்டனைகள்** : 5 வருதடத்திற்கு குறையாத சிறை தண்டனை அது 7 வருடம் வரை நீட்டிக்கப்படலாம் மற்றும் அபராதமும் விதிக்கப்படும். (பிரிவு 10).

**பாலியல் தொந்தரவுக்கான (Sexual harassment) தண்டனைகள்** : 3 வருடங்கள் வரையிலான சிறைத் தண்டனை மற்றும் அபராதமும் விதிக்கப்படும். (பிரிவு 12).

**I) a) ஆபாசப் படம் எடுத்தலில் (Porno graphic Purpose) குழந்தையை பயன்படுத்துவோருக்கான தண்டனைகள்:** 5 வருடம் சிறை தண்டனை மற்றும் அபராதமும் விதிக்கப்படும். (பிரிவு 14 (1)).

**b) ஒருமுறைக்குமேல் அதே தவறை செய்பவருக்கான தண்டனைகள் :** 7 வருடம் வரையிலான சிறைத் தண்டனை மற்றும் அபராதமும் விதிக்கப்படும். (பிரிவு 14 (1)).

**II) மேற்கூறிய குற்றத்துடன் (Porno graphic Purpose) பிரிவு 3ல் கூற ப்பட்டுள்ள குற்றத்தையும் செய்தால்** 10 வருடம் குறையாத ஆயுள் தண்டனை வரையிலான சிறைத்தண்டனை விதிக்கப்படும் (பிரிவு 14 (2))

**மேற்கூறிய குற்றத்துடன் பிரிவு 5ல் கூறப்பட்டுள்ள குற்றத்தையும் செய்து (Porno graphic purpose) தானே அப்பட செயல்பாடுகளில் நேரிடையாக பங்கேற்றால்** அவருக்கு ஆயுள் தண்டனை வரையிலான கடுங்காவல் தண்டனை மற்றும் அபராதமும் விதிக்கப்படும். (பிரிவு 14 (3)).

**ஆபாசப் படங்களை (Pornogrphic purpose) வியாபார நோக்கில் சேமித்து வைப்பதற்கான தண்டனைகள்** : 3 ஆண்டு சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டும் விதிக்கப்படும். (பிரிவு 15).

**குற்றத்திற்கு உடந்தை / தூண்டுதலாக (Abetment)** இருந்தால் செய்யப்பட்ட குற்ற த்திற்கு என்ன தண்டனையோ அதே தண்டனை வழங்கப்படும். (பிரிவு 17)

**குற்றம் புரிவதற்கு முயற்சி செய்தலுக்கான (Attempt to commit an offence) தண்டனைகள்** : ஆயுள் தண்டனையில் பாதியோ அல்லது அக்குற்றத்திற்கு அதிகபட்ச சிறைத் தண்டயைில் பாதியோ அல்லது அபராதம் விதிக்கப்படும் அல்லது இரண்டும். (பிரிவு 18) விதிக்கப்படும்.

**பிரிவு 19 மற்றும் 20ன் கூற ப்பட்டுள்ள குற்றங்கள் நடந்தது குறித்து தகவல்களை அளிக்க தவறினால்** ஆறு மாதம் வரையிலான சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும். (பிரிவு 21(1)

**ஒரு நிறுவனத்தின் பணியாளர் மேற்கூறிய குற்றங்கள் செய்து அதை அந்நிறுவன த்தின் அதிகாரி தெரிவிக்காதிருந்தால்** ஒரு வருடம் வரையிலான சிறைத் தண்டனை மற்றும் அபராதமும் விதிக்கப்படும். (பிரிவு 21(2))

**பிரிவு 3, 5, 7&9 ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பாக பொய்புகார் (False complaint) அல்லது தவறான தகவல் (False information) அளித்தலுக்கான தண்டனைகள்** ஆறு மாதம் வரையிலான சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும். (பிரிவு 22(1))